# SARVS AND GURUBAAI - THE ROAST DUO INTERACT WITH CAJ STUDENTS ON YOUTUBE AND MORE



The roast duo of the Tamil internet community had come to Loyola College to have a conversation with the students of CAJ on contemporary and retrospective views about YouTube and its impact, on 13th February 2023. Briefings on being niche specific and the abundance of content that has been produced, the nitty-gritties of YouTube algorithm and how the content is being promoted to the audience were a new value addition. Things like time retention, cost per mille calculations, ad revenue model and content production on the whole coming out of a creator’s perspective gave more clarity. The sarcastic approach by Sarvs and Gurubaai made the session lively.



During the Q&A, questions like usage of profanity, copyright strike and latest community guidelines were asked. Sarvs said, “Adding profanity to a content is not something to be worried about as it by itself is a sub-genre in comedy, e.g., absurd, dark comedy and it's nothing to be worried about.” Answering the queries on copyright strike and community guidelines, “Earlier YouTube was lenient on community guidelines and it was creators friendly, but right now its wholly on the hands of AI and monetization is now a complicated one since a creator has to review each content by mailing authorities and it is the same for copyright strike, unless and until the content is republished without credits”, the duo said. A little Crux about web 3.0 and Chat-GPT were also shone during the session.

***

Summary by: Tharun Devarajan/CAJ Student
Photo by: CAJ Team

வலையொளி நுட்பம், விதிமுறைகள் பற்றிக் கலந்துரையாடல்



வலையொளியில் (Youtube) பிரபலமாக அறியப்படுகின்ற Plip Plip யூடியூப் சானலின் சர்வ்ஸ் (Sarvs) மற்றும் குருபாய் (Gurubaai) உடனான அமர்வு - CAJ, இலயோலா கல்லூரி மாணவர்களுடன் பிப்ரவரி 13-ம் தேதி நடைபெற்றது. சமூக நடைமுறைகளை தங்களது காணொளிகள் மூலமாக இவர்களிருவரும் பகடி செய்து விமர்சித்து வருகின்றனர்.

இந்தக் கலந்துரையாடல் அமர்வில் சர்வ்ஸ் முதலில் தனது கருத்துகளைப் பகிர்ந்துகொண்டார்.

காணொளியில் தனித்துவம் வாய்ந்த முக்கியத் தலைப்பு மற்றும் உருவாக்கப்படும் உள்ளடக்கத்தின் தன்மை, YouTube வழிமுறைகள் மற்றும் பார்வையாளர்களுக்கு உள்ளடக்கம் எவ்வாறு விளம்பரப்படுத்தப்படுகிறது என்பது பற்றிய சுருக்கமான விவரங்கள் முதல், நேரத்தைத் தக்கவைத்தல், விளம்பர வருவாய் மாதிரி மற்றும் ஒட்டுமொத்த உள்ளடக்கத் தயாரிப்பு போன்ற விஷயங்கள் பற்றி அவரின் நகைச்சுவை கலந்த தொனியில் பேசினார்.

குறுகிய கால காணொளி, நீண்ட கால காணொளி என வலையொளி - காணொளிகளை வகைப்படுத்தி, அவற்றின் பார்வையாளர்களின் எண்ணிக்கை, அதை விரும்பியவர்களின் எண்ணிக்கை என பல அம்சங்களைத்

தெளிவாகக் கூறினார். அவ்வப்போது, இன்றைய நிலையில் வலையொளியின் கட்டுப்பாடுகள் குறித்தும் பகிர்ந்துகொண்டார்.

அவரைத் தொடர்ந்து உரையாடிய குருபாய், பதிவிடுகின்ற காணொளியின் உண்மைத் தன்மை பற்றியும் அதில் உள்ள சமூகப் பொறுப்புகள் பற்றியும் விளக்கிக் கூறினார்.

CAJ மாணவர்களுடனான கேள்வி-பதில் நேரத்தில், கேலிப் பேச்சின் தன்மை மற்றும் புரிந்துகொள்ளல் பற்றியும் காப்புரிமை, மற்றும் சமீபத்திய யூ டியூப் வழிகாட்டுதல்கள் வரை பலவும் குறித்து மாணவர்கள் கேள்விகளை எழுப்பினார்கள்.

ஓர்  உள்ளடக்கத்தில் கேலிப் பேச்சை கலப்பது கவலைப்பட வேண்டிய ஒன்றல்ல, ஏனெனில் அது நகைச்சுவையின் ஒரு வடிவம் என்பது இருவரின் கருத்தாக இருந்தது. முன்னதாக YouTube சமூக வழிகாட்டுதல்ள் படைப்பாளர்களுக்கு இணக்கமாக இருந்தது; ஆனால் தற்போது AI மற்றும் பணமாக்குதல் ஆகியவற்றின் மூலம் சிக்கலான ஒன்றாக மாறி வருகிறது என்றும்,  ஒரு படைப்பாளி ஒவ்வொரு உள்ளடக்கத்தையும் மதிப்பாய்வு செய்ய வேண்டும் என்றும் கூறினார்கள்.

மேலும் Chat-GPT, TikTok, Rumble போன்ற செயலிகளின் பயன்பாட்டையும்  Podcast பற்றிய புரிதலையும், தேவையையும் மாணவர்களுக்கு விளக்கினார்கள்.

மொத்தத்தில், இந்த யூ டியூப் பிரபலங்களிடமிருந்து புதிய தகவல்களையும் சமூக ஊடக நுட்பங்களையும் மாணவர்கள் அறிந்துகொண்டார்கள். அத்துடன் அமர்வு முழுவதும் மிகவும் கலகலப்பாக மாணவர்கள் உரையாடினார்கள்.

***

Summary by: Venkatesh S /CAJ Student
Photo by: CAJ Team